சேலம், பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள போஸ் மைதானத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் அரசுப் பொருட்காட்சியினை 09.08.2024 அன்று திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி,மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், சேலம் வடக்கு சட்ட மன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மாநகராட்சி ஆணையாளர் ரஞ்ஜீத் சிங், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.லலித் ஆதித்ய நீலம், மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

ஈரோடு மாவட்டம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதி வண்டிகளை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ் வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ், மாவட்ட ஊராட்சி தலைவர் நவமணி, மாவட்ட ஊராட்சி துணை தலைவர் கஸ்தூரி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### தாயுள்ளத்துடன் ஒரு தந்தையின் நிலையில் இருந்து

# தமிழ்நாட்டிற்கு ஒவ்வொரு திட்டங்களையும் தீட்டி வருகிறார் முதல்வர்!

### தருமபுரி மாவட்டத்தில் "தமிழ்ப் புதல்வன்" திட்டத்தை துவக்கி வைத்து - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேச்சு!

தருமபுரி ஆக 12- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் அரசு கலைக்கல்லூரியில், தமிழ் நாட்டு மாணவர்கள் தரணியை வென்றிட, அரசுப் பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந் தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கும் "தமிழ்ப் புதல் வன்" திட்டத்தை துவக்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, தருமபுரி மாவட்டம், பாப் பிரெட்டிப்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், தமிழ்ப் புதல் வன் திட்டத்தின் கீழ், தரு மபுரி மாவட்டத்தில் 68 கல்லூரிகளில் பயிலும், 7,033 மாணவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை ரூபாய் 1000/- க்கான பற்று அட்டை களை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வழங்கி னார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கரங்க ளால் ஜப்பான் பன் னாட்டு கூட்டுறவு நிறுவ னத்தின் நிதி உதவியுடன் ரூபாய் 1928 கோடி மதிப் பீட்டில் முதற்கட்டமாக தொடங்கிவைக்கப்பட்ட ஒகேனக்கல் கூட்டுக் குடி நீர் திட்டம் மூலம் தரும புரி மாவட்டத்தில் 2784 குடியிருப்புகளுக்கு பாது காக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்ட வருகிறது.

அவர்வழியில் நல் லாட்சி செலுத்தும் தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒகேனக்கல் கூட்டுக் குடி நீர் திட்டத்தின் 2ம் கட் டம் ரூபாய் 7 ஆயிரத்து 890 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என அறிவித்து, இதற்கான விரி வான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மூலம் தரும புரி மாவட்டத்திலுள்ள 2828 ஊரகக் குடியிருப்புகளுக்கு பாது காக்கப்பட்ட குடிநீர் வழங்கப் பட உள்ளது.

முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்கள் மாணவ, மாண வியர்களுக்கு இலவச பேருந்து பயணச்சலுகை கள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தினார். இதன் மூலம் இன்றும் மாணவ, மாணவியர்கள் பயன் பெற்று வருகின்றனர். நமது முதலைமைச்சர் இது போன்ற சிறப்பான திட் டங்களை நாட்டிறவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கி.சாந்தி,நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி ஆகி யோர் முன்னிலையில் வழங்கினார்.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச் சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் விழா பேரூரை ஆற்றிய போது தெரிவித்த தாவது:

தமிழ்நாடு முதல மைச் சர் அவர்கள் கல்வியறிவும் பொருளாதார சுதந்தி ரமும் பெண்களின் முன் னேற்றத் திற்கு மிக முக்கி யம் என்பதை உணர்ந்து, அரசுப்பள்ளிகளில் பயி லும் மாணவிகளின் உயர்க் கல்வி சேர்க்கை மிகக்குறை வாக இருப்பதை கருத்தில் கொண்டும் அரசு பள்ளிக ளில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயின்று, உயர்கல்வி பயி லும் அனைத்து மாணவிக ளுக்கும் மாதம் ரூபாய் ஆயிரம் அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக வழங்கும் "புதுமைப் பெண் திட்டத்தை கடந்த 5.9.2022 அன்று துவக்கி வைத்தார்.புதுமைப்பெண் திட்டத்தின் கீழ், தமிழ் நாட்டில் உள்ள கலை, அறிவியல், பொறியியல், தொழிற்படிப்பு, மருத்துவ கல்லூரிகளில் பயிலும் சுமார் 3.28 இலட்சம் மாண விகள் பயனடைந்துள்ள னர்.

இத்திட்டத்தினால் மாணவிகள் உயர்கல்வி யில் சேரும் எண்ணிக்கை 34 சதவீதம் உயர்ந்துள் ளது. புதுமைப்பெண் திட் டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்தில் 16,842 மாணவிகள் பயனடைந் துள்ளனர்.தமிழ்நாட்டில் பெண்களின் உயர்கல் வியை உறுதி செய்வதற் கென தொடங்கப்பட்ட புதுமைப் பெண் திட்ட மானது மாபெரும் வெற்றி யைப் பெற்றுள்ளதைய டுத்து, 2024-2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், பெண்க ளின் சேர்க்கையை அதிக ரிக்கும் நோக்கத்துடன் அறிமுகப்படுத்தப்பட்ட "மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டம்" பெண்க ளின் உயர் கல்வியில் பெரும் முன்னேற்ற த்தை ஏற்படுத்தியுள்ளது போல், அரசு பள்ளிகளில் பயின்ற, ஏழை எளிய மாணவர் களை சாதனையாளர்க ளாக உருவாக்கிடவும், அரசுப் பள்ளி மாணவர்க ளின் உயர்கல்வி சேர்க் கையை உயர்த்திடவும், "தமிழ்ப் புதல்வன்" எனும் மாபெரும் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 6 முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் பயின்று மற் றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழி யில் பயின்று உயர்கல்வி சேரும் மாணவர்கள், பாடப் புத்தகங்கள், பொது அறிவு நூல்கள் மற் றும் இதழ்களை வாங்கி அவர்களது கல்வியை மெருகேற்றிட உதவும் வகையில், மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அவர் களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்ப டும் எனவும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.இத னைதொடர்ந்து, தமிழ்ப்பு தல்வன் திட்டத்தை தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் (09.08.2024) அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் துவக்கி வைத்துள்ளார்.

தருமபுரி மாவட்டத் தில் இத்திட்டம் பாப்பி ரெட்டிபட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி யில் துவக்கி வைக்கப்படுகி றது. தருமபுரி மாவட்டத் தில் தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் 68 கல்லூ ரிகளில் உயர்கல்வி பயி லும், 7033 மாணவர்க ளுக்கு மாதம் ரூபாய் ஆயிரம் நிதி உதவி வழங் கும் விதமாக, இவ்விழா வில் 358 மாணவர்களுக்கு இன்றைய தினம் வழங்கப் பட்டுள்ளது.உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் ஆயிரம் ரூபாய் நிதி உதவி என்பது மிகச்சிறந்த உதவித்தொ கையாகும். மாணவர்க ளுக்கான எதிர்கால வாழ் விற்கான ஒரு முதலீடாக இருக்க வேண்டும் என்று இத்திட்டத்தினை தமிழ் நாடு முதலமைச்சர் அவர் கள் செயல்படுத்தி உள் ளார்.இந்நிதி உதவியை மாணவர்கள் சேமிப்பாக வைத்து, மேலும் உயர்கல் விக்கு பயன்படுத்தி கொள்ள வேண்டும். புத்த கங்கள் வாங்குவது, கல்வி சார்ந்த விஷயங்களுக்கு மட்டுமே பயன்படுத்தி தங்களின் உயர்கல்விக்கு உத்திரவாதமாக இந்நி தியை பயன்படுத்த வேண் டும். அறிவு சார்ந்த சமுதா யமாக தாம் உருவாகு வதற்கு இந்நிதியை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்நிதியை கொண்டு ஏதேனும் போட்டித் தேர்வுகளுக்கு தேவையான நல்ல புத்த கங்களை வாங்கி படிக்க லாம். உங்களுக்கு ஒரு வெல்கம் கிட் கொடுக்கப் பட்டுள்ளது. அதில் வழி காட்டுதல் கையேடும், பொருளாதாரம் சம்பந்த மான குறிப்புகளுடன் கூடிய புத்தகமும் உள்ளது. இவற்றை நீங்கள் முழுமை யாக படித்து பயன்பெற வேண்டும்.மாணவர்கள் சிறந்த கல்வியை கற்றால் அவர்கள் சுயமாக தொழில் செய்து முன்னே றுவதற்கு நல்ல வாய்ப்பாக வும், வேலைவாய்ப்பு பெறவும் உறுதுணையாக அமையும். மாணவர்கள் தங்களின் வாழ்வின் முன் னேற்றத் திற்கு தேவை யான ஆக்கப்பூர்வமான சிந்தனைகளை உருவாக்கி கொள்ள வேண்டும். நீங் கள் மனது வைத்தால் எதையும் சாதிக்கலாம். எளிதில் வெற்றி அடைய லாம்.மேலும், தருமபுரி மாவட்டத்தில் கு அளித்து ஒரு பெற்றோர் தமது பிள் ளைகளுக்கு செய்ய வேண் டிய அனைத்தையும் செய்து, தாயுள்ளது டன்,ஒரு தந்தையாகவும் செயல்பட்டு நாட்டின் வளர்ச்சியில் இந்தியாவின் மற்ற மாநிலங்களை விட சிறந்த மாநிலமாக தமிழ் நாட்டை மாற்றி இருக்கி றார்.இன்று,தருமபுரி மாவட்ட மாணவர்கள் த மி ழ் ப் பு த ல் வ ன் திட்டத்தின் கீழ் மாதந் தோறும் வழங்கப்படும் ரூபாய் 1000 நிதி உதவி யினை உயர்கல்விக்கு உத் திரவாதமாக நீங்கள் பயன் படுத்தி கொண்டு, உயர்ந்த இடத்தை அனைவரும் எட்ட வேண்டும், உயர் கல்வி என்பதை உங்கள் இலக்காக கொண்டு வாழ் வில் வெற்றியடைய வேண்டும் என்று பேசி னார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவ லர் செ. பால்பிரின்ஸ்லி ராஜ்குமார், முன்னாள் அமைச்சர் மேற்கு மாவட்ட கழக செயலா ளர் பி.பழனியப்பன், முன் னாள் சட்டமன்ற உறுப்பி னர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, முன்னாள் மாவட்ட கழக செயலா ளர்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.என்.பி.இன் பசேகரன், மேற்கு மாவட்ட அவைத்தலை வர் மனோகரன், மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.ஜோதி சந்திரா, மாவட்ட சமூக அலுவலர் திருமதி.ச. பவித்ரா, வருவாய் கோட் டாட்சியர் வில்சன் ராஜ சேகர், கல்லூரி கல்வி மண் டல இணை இயக்குநர் திருமதி.பா.சிந்தியா செல்வி, மாவட்ட முன் னோடி வங்கி மேலாளர் ராமஜெயம்,ஒன்றிய குழு தலைவர் திருமதி.உண் ணாமலை குணசேகரன், வட்டாட்சியர் திருமதி. வள்ளி,கல்லூரி முதல்வர் ரவி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள்,உள்ளாட்சி பிரதிநிதிகள், கல்லூரி மாணவர்கள், பேராசிரி யர்கள் கலந்து கொண்ட னர்.

### மயிலாடுதுறை மாவட்டத்தில்

# மாணவ - மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்! நிவேதா முருகன் - எம்.பன்னீர்செல்வம் பங்கேற்பு!

மயிலாடுதுறை ஆக.12 மயிலாடுதுறை மாவட் டம் தரங்கம்பாடி தூய தெரசா பெண்கள் மேல்நி லைப்பள்ளியில் மாவட்ட அளவில் 6254 மாணவ, மாணவிகளுக்கு ரூ. 3 கோடி மதிப்பிலான மிதிவண்டிகள் வழங்கும் விழா நடைபெற் றது. விழாவிற்கு மயிலாடு துறை மாவட்ட ஆட்சித்த லைவர் ஏ.பி.மகாபாரதி தலைமை தாங்கினார்.

மயிலாடுதுறை மாவட் டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன், சட்ட மன்ற உறுப் பினர்கள் சீர்காழி எம்.பன் னீர்செல்வம், மயிலாடு துறை எஸ்.ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ..வீ. மெய்யநாதன் கலந்து கொண்டு 6254 மாணவர்க ளுக்கு சைக்கிள்களை வழங்கி பேசியதாவது:-

மயிலாடுதுறை மாவட்ட அளவில் 6254 மாணவ, மாணவிகளுக்கு ரூ. 3 கோடி மதிப்பீட்டிலான மிதி வண் டிகள் வழங்கப்படுகிறது. வரலாற்று சிறப்பு வாய்ந்த தரங்கம்பாடி மண்ணில் தொடக்கத்தில் சிறுபான்மை மக்கள் தான் கல்விக்காக நூற்றாண்டு களை கடந்து கல்விக்கு முக் கிய பணியாற்றி வருகின்ற னர்.

இப்பள்ளி 1493 மாணவ, மாணவிகளை கொண்டு செயல்பட்டு வருகிறது. மயிலாடுதுறை மாவட்டத் திற்கு சிறப்பு சேர்க்கின்ற வகையில் இந்தபள்ளி 10ம் வகுப்பு தேர்வு, 12ம் வகுப்பு தேர்வுகளில் கிட்டத்தட்ட அதிக மதிப்பெண் பெற்று இப்பள்ளி உள்ளது. மயிலா டுதுறை மாவட்டத்திற்கு சிறப்பு சேர்க்கின்ற வகை யில் இந்தபள்ளி செயல் பட்டு கொண்டிருக்கிறது. அதற்காக பணியாற்றிய அணைத்து ஆசிரியர்களுக் கும் வாழ்த்துகள். கல்வி என்பது மிக முக்கியமான ஒன்று,

நமது மயிலாடுதுறை மாவட்டத்தை பொறுத்தவ ரைக்கும் 10ம் வகுப்பு படிக் கின்ற மாணவர்களின் எண் ணிக்கை 12,705, 11ம் வகுப்பு படிக்கின்ற மாண வர்களின் எண்ணிக்கை 10,345, 12ம் வகுப்பு படிக் கின்ற மாணவர்களின் எண் ணிக்கை 10,487 ஆக உள் ளது. இந்த அளிவில் நாம் ஒவ்வொர் ஆண்டும் கல்வி யைக் கற்று வருகின்றோம். கிட்டத்தட்ட 100 சதவீதம் நாம் கல்வியாராக படித்த வர்களாக நாம் மாறி இருக் கிறோம்.

ஒரு காலத்தில் படித்த வர்கள், படிக்காதவர்களை பார்த்து படியுங்கள் என்று கூறி கொண்டு இருப் போம். ஆனால் தற்போது அனைவரும் படித்தவர்க ளாக மாறி விட்டனர். எந்த ஒரு அரசு பதவியோ அல் லது வேறு எந்த ஒரு நிலையை அடைய வேண் டும் என்றால் நாம் தொடர்ந்து புத்தகங்களை, நூல்களை படிக்க வேண் டும்.

நம் அறிவுத்திறனை நாம் அதிகமாக வளர்த்துக் கொள்ள வேண்டும். அப் போது தான் நாம் தொடர்ந்து வெற்றியாளர்க ளாக உருவாக முடியும். இந்த மண்ணில் சாதனை யாளர்களாக திகழ முடி வும். நமது தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் எண்ணற்ற திட்டங்களான நான் முதல்வன் திட்டம், இல்லம் தோடி கல்வி, தமிழ் புதல்வன், புதுமைப்பெண் திட்டம் போன்ற மகத்தான திட்டங்களை தந்து இன் றைக்கு கல்வித்துறையில் பல்வேறு சாதனைகளை தந்து இன்றைக்கு கல்வித்து றையில் பல்வேறு சாதனை களை நிறைவேற்றி உள் ளார்.

அதன் தொடக்கமாக தான் இன்றைக்கு இந்த விழாவும்ட நடைபெற்று கொண்டிருக்கின்றது. நமது முத்தமிறிஞர் கலைஞர் அவர்கள் தான் இந்தியா வில் இருக்கின்ற பல்வேறு மாநிலங்கள் கல்வியில் மிக, மிக பின்தங்கிய நிலையில் இருக்கின்றது. நமது மாநி லத்தில் உயர்கல்வி 51 சதவீ தம் பேர் பெற்ற மாநிலமாக இந்தியாவில் தமிழ்நாடு தான் முதன்மை மாநில மாக விளங்குகிறது.

நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவ்ாகள் கல்விக் காக பல்வேறு திட்டங்க ளை கல்விக்காக அரசு உயர் நிலைப் பள்ளிகளை, மேல் நிலைப் பள்ளிகளை, பல்க லைக்கழகங்களை மாவட்டத்திற்கு ஒரு மருது தவக்கல்லூரி அனைத்தை யும் உருவாக்கித்தந்தவர் இந்தியாவிற்கே ஒரு வழி காட்டியாக இருந்தவர். அதுபோல முதல் வகுப்பு முதல் முதுகலை வகுப்பு வரை இலவச கல்வியை தந் தவர் அந்த அடிப்படையில் தான் இன்றைக்கு அரசு பள் ளியில் படிக்கின்ற 7.5 சதவீ தம் உயர்கல்வி படிக்கின்ற வர்களுக்கு மருத்துவ பிரிவில் மாணவர்களக்கு இட ஒதுக்கீடு தந்துள் ளார்கள்.

மற்ற உயர்படிப்புக ளுக்கு அந்த இட ஒதுக் கீட்டை நமக்கு அளித்தவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தான். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல் விக்காக ஆண்டுக்கு ரூ. 200 கோடி ஒதுக்கீடு செய்து அதை நாம் பெற்று வருகி றோம். கல்வி என்பது கடின மான இருந்தாம் அதை கற்று நாம் வரும்போது மிக எளிதாகிவிடும்.

நாம் பிளாஸ்டிக் உப கோகிப்பதை முற்றிலும் தவிர்த்துவிட வோண்டும். அதற்காக நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் பஞ் சள்பை என்ற மகத்தான திட்டத்தை உருவாக்கி உள் ளார்கள். அதை நாம் பயன் படுத்த வேண்டும்.

அதற்காக தூய்மையாக வைத்திருக்கும் பள்ளி, கல் லூரிகளுக்கு முதல் பரிசு ரூ. 10 லட்சமும், 2 வது பரிசாக ரூ. 5 லட்சமும், 3 வது பரி சாக 3 லட்சம்ட என்று நம் முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகி றார்கள். இளம் வயதில் நாம் சுற்றுபுறத்தை தூய் மையாக வைத்திருக்கும் அந்த பணியையும் ற்கொள்ள வேண்டும். பள் ளிக் கல்வித்துறையில் மிகப் பெரிய சாதனைகளை செய்து வருகின்றார்கள்.

இவ்வாறு அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசி னார்.

விழாவில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் முத் துமகேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் மு,ஞான வேலன், எஸ். செல்வமணி, ஒன்றியக் கழ கச் செயலாளர்கள் எம்.அப் துல்மாலிக், பஞ்சுகுமார், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், தகரங்பாடி பேரூர் செயலாளர் முத்துராஜா, மாவ ட்ட ஊராட்சி குழு தலைவர் உமா.மகேஸ்வரி சங்கர், ஒன்றியக் குழு தலை வர்கள் நந்தினிஸ்ரீதர், தரங் கம்பாடி பேரூராட்சி தலைவர்சுகுனாசுந்தரிகுமர வேல் மற்றும் ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதி நிதிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### 50 வருடக் கனவுத் திட்டம், பயன்பாட்டிற்குத் தயாராகும்

# சென்னம்பட்டி அணைக்கட்டு வலது கால்வாய்!

### வறண்ட பூமியை உயிர்பெறச் செய்தார், அமைச்சர் தங்கம் தென்னரசு!

விருதுநகர், ஆக. 12- காரியாபட்டி,மல்லாங் கிணறு பகுதிகளில் உள்ள 19 கண்மாய்களுக்குப் பாசன நீர் வழங்கும் சென்னம்பட்டி அணைக் கட்டு திட்டத்தினை தனது சொந்த முயற்சியின் மூலம் தமிழ்நாடு நிதி மற் றும் மனிதவள மேலாண் மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கொண்டு வந்துள்ளார். இத்திட்டத்தின் மூலம் 746.62 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும்.

**வானம் பார்த்த பூமி!**

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி,மல்லாங்கி ணறு பகுதிகள் விவசாயப் பெருங்குடி மக்கள் அதி கம் வாழும் பகுதியாகும். இப்பகுதி வானம் பார்த்த பூமியாக இருப்பதால், விவசாய மக்கள் பயன் பெற சென்னம்பட்டி அணைக்கட்டு திட்டம் தொடங்கப்பட்டது. ஆனால் உரிய நேரத்தில் பணிகள் நிறைவடை யாமல் இருந்ததால் விவ சாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டது.

தொடர்ந்து, விவசா யம் மற்றும் விவசாய மக் களின் வாழ்வாதார முன் னேற்றத் தைக் கருத்தில் கொண்டு சென்னம்பட்டி அணைக்கட்டு கனவுத் திட்டம் குறித்து சட்ட மன்றத்தில் அமைச்சர் தங் கம் தென்னரசு குரல் கொடுத்தார்.

இந்நிலையில் அமைச்ச ரின் கோரிக்கையை ஏற் றுத் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்க ளின்வழிகாட்டுதலின்படி நீர்வளத் துறை மானிய கோரிக்கையிலிருந்து இத் திட்டத்திற்கான அறி விப்பு வெளியானது. தற் போது கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து திறக்கப்படவுள்ள "சென் னம்பட்டி அணைக்கட்டு வலது கால்வாய்" வறண்ட பூமியை மீண் டும் உயிர்பெறச் செய் யும்.

தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் "தமிழ்ப் புதல்வன் திட்டதொடக்க விழா காணொலியில் பங்கேற்ற சட்ட மன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், திருவாரூர் மஞ்சக்குடியில் திட்ட பயனாளி மாணவர்களுக்கு ஏடிஎம் அட்டைமற்றும் உயர் கல்வி வழிகாட்டு கையேட்டினை வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார்,மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, ஒன்றிய செயலாளர் ப.பிரபாகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

விழுப்புரம் தெற்கு மாவட்ட அனைத்து அணிகளின் கூட்டம் மாவட்டச் செயலாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி தலைமையில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் நடைபெற் றது. கூட்டத்தில் 2026 சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்கான பணிகள், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, அணிகளின் ஆக்கப்பணிகள் உள்ளிட்ட பல்வேறு கழக ஆக் கப்பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் விழுப்புரம் டாக்டர். இரா.இலட்சுமணன், விக்கிரவாண்டி அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந் திரன், மாவட்ட பொருளாளர் இரா ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என் முருகன், தயா.இளந்திரையன், இரா.கற்பகம், மகளிர் அணி பிரச்சாரக் குழுச் செயலாளர் தேன்மொழி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி செல்வ ராஜ், மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞர் அணி செ.தினகரன், பொறியாளர் அணி புகழ். செல்வகுமார், மாணவர் அணி ரீ வினோத், தொண்டர் அணி கபாலி, வழக்கறிஞர் அணி சுவை. சுரேஷ், தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, வர்த்தக அணி கோல்டு வெங்கடேசன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.